அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*467வினா— திரு . கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டி துணை வட்டம், பெத்திக்குப்பம் அரிசன காலனியில் உள்ள வீடற்ற அரிசனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கும்முடிப்பூண்டி துணை வட்டத்திலிருக்கும் பெத்திக்குப்பம் அரிசன காலனியில் வசிக்கும் அரிசனங்களுக்கு போதுமான வீட்டு வசதி இருப்பதால், வேறு நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

திரு கா வேழவேந்தன்: தலைவரவர்களே, இது முன்னர் இருந்த நிலை. இப்போது மனு ஒன்று தரப்பட்டிருக்கிறது. அதன் மேல் மறு பரிசீலனை செய்து அவர்களுக்கு வீட்டு மனை தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது எப்போதுள்ள நிலை என்று குறிப்பு இல்லை. ஆனால் மறுபரிசீலனை செய்யலாம்.

திரு இ. எஸ். தியாகராசன்:—தலைவரவர்களே, பொதுவாகவே அரிசனங்களுக்கு மனைகள் வாங்கித் தருவதில் அதிக தாமதம் ஆகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசு அதிகமான அதிகாரிகளையும் அலுவலர்களையும், நியமித்து உடனுக்குடன் அரிசனங்களுக்கு மனை வாங்கித் தர முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: காலதாமதத்திற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதற்குப் பல்வேறு முறையான காரியங்களில் ஈடுபட வேண்டியிருக்கிறது. நோட்டிபிகேஷன் செய்யவேண்டும். 5(ஏ) என்கொயரி வைக்கவேண்டும். 6 (1) என்கொயரி வைக்க வேண்டும். அவ்வப்போது நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அதற்காக கடைசி கட்டத்தில் போய் வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்குப் போட்டு விடுகிறார்கள். அந்த வழக்கு போட்டு விட்டால் அது பல ஆண்டுகளுக்கு நடத்த வேண்டியிருக்கிறது. இதனால் தான் கால தாமதம் ஆகிறதே தவிர அதிகாரிகளும் அலுவலர்களும் இல்லாத காரணத்தால் தாமதம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட ஊரில் இருப்பதைப் பற்றிய கேள்வியில் பாலிசி மேட்டரைப் பற்றிக் கேட்கக் கூடாது. பாலிசியைப் பற்றி அமைச்சர் சொல்ல முடியும். ஆனால் ஒவ்வொரு கேள்விக்கும் இப்படி ஆரம்பித்தால் மிகவும் நேரமாகும்.